# முரசொலி

பக்கங்கள் நான்கு | விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 257 ஆங்கீரச ஆவணி 03 (19.08.1992) புதன்

★ நேற்றைய தாக்குதல்குறித்து

## சர்வதேச செஞ். சங்கம் தலைமையகத்துக்கு புகார்

நேற்றுக்காலை யாழ் கடற்பகுதியில் இருந்து கடற்படையினர் நகரில் பாதுகாப்பு வலயப்பகுதியை நோக்கி நடத்திய கலிபர் தாக்குதல் சம்பவங்கள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் அதன் தலைமையகத்துக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் புகார் செய்துள்ளனர். சன்னங்கள் வீழ்ந்த பகுதிகளையும் சர்வதேச செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் சென்றுபார்வையிட்டனர். அவற்றின் சிதறல்களையும் பிரதிநிதிகள் எடுத்துச் சென்றுள்ளனர். (07)

# யாழ்நகரை நோக்கி கலிபர் தாக்கு

# பாதுகாப்பு வலையத்தில் ரவைகள்

### பஸ் வண்டி கண்ணாடி நொருங்கியது புடவை கடைகளினுள் ரவைகள் பாய்ந்தன

மண்டைதீவுப் பகுதியிலிருந்தும் கடற்பரப்பிலிருந்தும் நேற்றுக் காலை 10.45 மணியளவில் படையினர் யாழ் நகரை நோக்கி சரமாரியான 51 கலிபர் தாக்குதல் நடத்தினர் பல கலிபர் ரவைகள் யாழ் ஆஸ்பத்திரிப் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தினுள்ளும் வீழ்ந்து சேதங்களை ஏற்படுத்தின.

இத்தாக்குதலில் யாழ் பஸ் நிலையத்தில் தனியார் பஸ் வண்டி ஒன்றின் கண்ணாடிகள் சிதறின நகரின் மையப் பகுதியில் உள்ள சிமாடி, பாரீஸ் புடவைக்கடைகளிலும் ரவைகள் வந்து வீழ்ந்தன.

பாரீஸ் புடவைக்கடையின் முன்னால் சேலைகளை அடுக்கி கொண்டு நின்ற கடை ஊழியர் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினார், பாய்ந்த ரவையினால் சில சேலைகள் கருகின.

படையினர் அரைமணி நேரம் நடத்திய இந்த கலிபர் தாக்குதலின் போது இடையிடையே ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டனர்

கலிபர் ரவைகள், ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய் வீதி, நாக நிலையக் கட்டிடப்பகுதிகளிலும் வீழ்ந்தன.

ஆஸ்பத்திரி வீதியில் சாப்புறுதி கூட்டுத்தாபனம் முன்னால் நின்ற பசு மாடு மீது ரவை ஒன்று பாய்ந்ததில் அவ்விடத்திலேயே அது பலியானது.

இச் சம்பவங்களையடுத்து நகரில் சில கடைகள் இழுத்து மூடப்பட்டன மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள் 07

# பரீட்சை மாணவர்கள் பாதிப்பு

நேற்று மண்டைதீவிலிருந்து நடத்தப்பட்ட கலிபர் தாக்குதல்களினால் நகரப்பகுதி பாடசாலைகளில் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவர்கள் அதிர்ச்சியும் அச்சமும் அடைந்தனர்.

பாடசாலை ஒன்றின் பரீட்சை மண்டபத்திற்கு அருகில் குண்டுச் சன்னங்கள் வீழ்ந்ததால் மாணவர்கள் அதிர்ச்சியடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது

இத்தாக்குதலினால் மாணவர்களின் விடை எழுதும் நேரம் பாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடப்படுகிறது.

# மணலாற்றில் காவலரண் தாக்கு ஷெல்களும் மீட்பு

மணலாற்றில் உள்ள சிலோன் தியேட்டர் இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள காவலரண் ஒன்று நேற்றுக்காலை புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது நேற்றுக்காலை 6.30 மணிக்கு ஆரம்பித்த தாக்குதல் 5 நிமிடம் நீடித்தது தாக்குதலின் போது காயமடைந்த படையினர் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்

காவலரணிலிருந்து

- 40 எம் எம் ஷெல்கள் -39
- ஐ எம் ரவைகள் - 1870
- சிறிய கிளைமோர்கள் - 2
- ஏகே மகஸீன் - 7
- ஏகே ரோகஸர் - 2
- இராணுவ பை - 1
- இராணுவ தொப்பி - 3
- 2 சோடி இராணுவ சப்பாத்து என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன

# லலித் தொடர்ந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி. பி. குலரத்னாவுக்கு எதிராக லலித் அத்துலத்முதலி தொடர்ந்திருந்த 50 லட்சம் ரூபா மானநஷ்ட வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கல்கிசை மாவட்ட நீதிமன்றம் நேற்று இத்தீர்ப்பை வழங்கியது

1988 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இரத்தினபுரி எலிபன்ட் பாலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவதூறு ஏற்படுத்தும் வகையில் உரையாற்றியதற்காக குலரத்ன மீது லலித் இவ் வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

# மருத்துவ மாணவர்கள் தமிழகத்தில் உண்ணாவிரதம்

தமிழகத்தில் ஸ்ரீ இராமசந்திரா மருத்துவக்கல்லூரி தனியார் மயமாக்கப்பட்டதைக் கண்டித்து மருத்துவ மாணவர்கள் நேற்று முதல் காலவரையறை அற்ற உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

முதற்கட்டமாக தமிழகத்தின் 10 மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த 10 மருத்துவ மாணவர்கள் உண்ணாவிரதத்தில் குதித்தனர் இதனால் அனைத்து மருத்துவக் கல்லூரிகளும் தமிழகத்தில் மூடப்பட்டுள்ளன.

இதனிடையே சர்ச்சைக்குரிய ஸ்ரீ இராமசந்திரா மருத்துவ கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் ஆட்சேபனை மனு ஒன்றை தமிழக ஆளுநர் தமிழக பொலிஸ் ஆணையாளர் ஆகியோருக்கு வழங்கியுள்ளன.

தமிழினம் காக்கும்
வனவளம் காப்போம்

★ சபையில் அமைச்சர் ரணில்

# கண்ணிவெடிச் சம்பவப்பகுதி வீடியோ படமாக்கப்பட்டது

அராலியில் இம் மாதம் 8 ஆம் திகதி படை அதிகாரிகள் தமது இராணுவ கடமையில் இருந்தபோது இராணுவ நடவடிக்கைப் பிரதேசத்தில் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்ததால் இராணுவ கடற்படை சட்டவிதிகளுக்கு அமைய அவர்களின் மரணம் தொடர்பான தகவல்களை அறிய நீதிமன்ற விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது'

இவ்வாறு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது கூறினார்

கண்ணிவெடிச்சம்பவம் இடம்பெற்ற பகுதி வீடியோ படம் பிடிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடி இடம்பெற்ற பகுதிக்கு பொறுப்பான படை அதிகாரிகள் விசாரணைக்கு தேவையான ஆதாரங்களைப் பெற நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

படை அதிகாரிகள் அமுக்க கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்ததாக செகுஜனத்தொடர்புச் சாதனங்கள் அறிவித்தன ஆனால் இதற்கு மாறாக எதுவிதமான அறிக்கைகளும் கூறவில்லை எனவும் அமைச்சர் மேலும் சொன்னார்.

# இடம்பெயர்ந்தவர்களுக்கு 3 வது உ.உ. அட்டை விநியோகம்

இராணுவ நடவடிக்கைகளினால் வடமராட்சி கிழக்கிலிருந்து வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு மூன்றாவது தொடர் 'இ' உலர் உணவு அட்டைகள் வழங்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

மூன்றாவது தொடர் 'இ' உலர் உணவு அட்டைகளை இடம் பெயர்ந்தோர் அம்பலில் உள்ள வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் 10

# அராலி கண்ணிவெடி: தமிழ்க் குழு மறுப்பு

அராலித்துறை கண்ணிவெடிச் சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அரசுக்கு ஆதரவளிக்கும் ஈ.பி.டி.பி என்ற தமிழ்க்குழு அறிவித்துள்ளது

இக்கண்ணிவெடி தாக்குதலுக்கு புலிகளே காரணம் எனவும் தமது அமைப்பினுள் புலிகளின் ஊடுருவல் இல்லை எனவும் அதுமேலும் தெரிவித்துள்ளது.

யாழ் குடா மீதான இராணுவ தாக்குதலுக்கு இராணுவத்தினருக்கு இக்குழுவும் உதவி அளிப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

★ டக்ளஸ் பி. பி. ஸி க்கு தகவல்

# நாம நடமாடும் இடத்தில் கண்ணியை எப்படி புதைப்போம்

பரந்த ஒரு தீவுப்பகுதியில் கண்ணிவெடி புதைக்கப்பட்டதை கண்டுபிடித்து அகற்றுவது கடினமான விடயம் என ஈ.பி.டி.பி குழுவின் டக்ளஸ் தேவானந்தா பி.பி.ஸி க்கு தெரிவித்துள்ளார்

ஊர்காவற்றுறையில் உங்கள் குழு இருந்தும் எப்படி அராலித்துறையில் கண்ணிவெடியை கண்டுபிடிக்க தவறினீர்கள் என பி.பி.ஸி நிருபர் கேட்டபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

தீவினுள் புலிகள் மக்களினுள் ஊடுருவி அராலித்துறையில் கண்ணிவெடியை புதைத்திருக்கலாம் அல்லவா என பி.பி.ஸி, நிருபர் கேட்டபோது அப்படி ஊடுருவ சாத்தியமில்லை என்றார் டக்ளஸ் தேவானந்தா,

இராணுவமோ அல்லது உங்கள் குழுவோ புதைத்த கண்ணிவெடி வெடித்திருக்கக் கூடிய சாத்தியம் உண்டா என்று கேட்கப்பட்டபோது நாம் நடமாடும் பகுதியில் எப்படி நாமே கண்ணிவெடியை புதைப்போம் என அவர் குறிப்பிட்டார்

நாம் எவரின் நடமாடும் இடத்திலேயே கண்ணிவெடியை வைப்போம் எனவும் அவர் மேலும் சொன்னார்.

# நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் 1992

## ஐம்முக நாகம்

1. பாம்பு, நஞ்சு, மாணிக்கம், படம் மூன்றையும் மறைத்து வேண்டும்போது வெளிப்படுத்தும் வல்லமை உடையது; தானும் புற்றில் மறைந்து வெளிவரும் தொழில் உடையது அது போல, திரோதானசத்தி பக்குவம் வரும் வரையும் மறைந்திருந்து வேண்டும் போது வெளிப்பட்டு, ஆன்மாக்களுக்கு அருள்புரியும் தன்மை உடையது.

2. குண்டலினி சத்தி, பாம்பு வடிவமானது. அதன் விரிவு ஒடுக்கமே பிரபஞ்சத் தோற்றம், ஒடுக்கம், அச் சத்திக்கு நிமித்த காரணமாய் உள்ளவர் தாமே என் பதை வெளிப்படுத்த இறைவன் பாம்பை வாகன மாகக் கொள்வதாக உருவகிக்கப்படுகின்றது.

3. குண்டலினி சத்தியை, ஆறு ஆதாரங்களின் வழி யாய்ச் செலுத்தும்போது மூலாதாரத்துக்கு மேலா யுள்ள மற்றை ஐந்து ஆதாரங்களிலும் அது அடை யும் மாற்றத்தையே ஐம்முக நாகமாக உருவகப்படுத் திக் கூறுவர் யோகியா என்பர். எனவே அதனை நினைவுறுத்தவும் ஐம்முகநாகம் இறைவனின் வாகன மாகக் கொள்ளப்படுகின்றதெனலாம்.

(ஆதாரம்: சைவ சமய சிந்தாமணி)

# இன்றைய தெய்வீக இசையரங்கு

## சிறிமுருகன் தண்ணீர்ப் பந்தல்

மாலை 6.00 - இரவு 8.00

| பாட்டு | வயலின் | மிருதங்கம் |
|---|---|---|
| ஐ வேலாயுத பிள்ளை | பாக்கியலக்ஷ்மி நடராஜா | எம். நாகராஜன் |

# ஆடிவேல் நிகழ்ச்சிகள் வீடியோ பிரதிகளாக விற்பனை

கடந்த ஒன்பது வருடங்களுக்குப் பின்னர் இம்முறை கொழும்பில் வெகு சிறப்பாக நடைபெற்ற ஆடிவேல் விழாவின் தொகுப்பு நிகழ்ச்சிகள் அடங்கிய வீடியோப் பிரதிகள் அங்கு இப்போது விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

இந்த வீடியோ நாடாவில் மூன்று மொழிகளிலும் விவரணம் செய்யப்பட்டுள்ளது. ஈழத்துக் கலைஞர்களால் இயற்றப்பட்ட பக்திப் பாடல்களும் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளன.

# வடக்கு இராணுவ நடவடிக்கை சிறிது மாற்றத்துடன் தொடரும்

**- சிசில் வைத்தியரத்ன**

வடக்கில் யுத்தம் தொடரும் என இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்

இந்த இராணுவ நடவடிக்கைகள் முன்னர் திட்டமிடப்பட்டதிலிருந்து சிறிது மாற்றத்துடன் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்

# அரச தமிழ்ப்பாடசாலைகளில் அதிகளவு அதிபர் வெற்றிடங்கள்

இலங்கையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சுமார் 459க்கும் அதிகமான அதிபர் வெற்றிடங்கள் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது

இவற்றில் அதிபர் தரம் ஒன்றுக்கு 45 வெற்றிடங்களும், தரம் இரண்டிற்கு 129 வெற்றிடங்களும், தரம் மூன்றுக்கு 285 வெற்றிடங்களும் உள்ளன.

இவற்றை தற்பொழுது நடைபெற்றுவரும் நேர்முகப் பரீட்சைகளின் மூலம் நிரப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கல்விச் சேவை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்டதொகை பதவியுயர்வுகள் அதிபர் தரம் 2,3 ஆகியவற்றில் தற்போது கடமை புரிவோரில் இருந்து சேவை மூப்பு அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன.

31.12.1977 ஆம் திகதிக்கு முன்னர் அதிபர் தரம்-2 பதவி உயர்வு பெற்றவர்கள் அதிபர் தரம் 1 க்கும், 01 01 1985 க்கு முன்னர் அதிபர் தரம்3 பதவி உயர்வு பெற்றவர்கள் அதிபர் தரம் 2 க்கும் பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

இச்சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு கிடைக்காதவர்கள் க. சே. சபைச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்து அதன் பிரதியை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு அனுப்பினால் அவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க சங்கம் ஆவன செய்யும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணிவெடிக்கு 4இந்தியபடை பலி

இந்திய பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் வைத்த கண்ணிவெடியில் சிக்கி இந்திய எல்லை பாதுகாப்புப் படையினர் நால்வர் உயிரிழந்துள்ளனர்

## கஸ்ரோவிடம் கோரிக்கை

கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோ தனது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டுமென அவரது சகோதரி கேட்டுள்ளார்.

உலகின் இறுதி கம்யூனிஸ்ட் பொலிஸ்டைகளில் ஒன்றாகவுள்ள கியூபாவின் மக்களை சுதந்திரத்தை அனுபவிக்க அனுமதிக்குமாறும் அவர் தனது சகோதரனைக் கேட்டுள்ளார்.

## ஆசிரிய நியமனம்

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. புனர்வாழ்வு அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இத் திட்டத்திற்கமைவாக தென்பகுதியில் வன்செயல்களின்போது உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களில் போதிய கல்வித் தகைமைகள் உள்ளவர்களுக்கு ஆசிரியர் பதவிகள் வழங்கப்படவுள்ளன. 14

## ஐ. நா. குழு

தென்னாபிரிக்காவில் வன்செயலை நிறுத்துவதற்கு உதவியாக அங்கு ஐ நா அவதானிகளை அவசரமாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபை ஏகமனதாக அதிகாரம் வழங்கியுள்ளது.

எத்தனை பேரடங்கிய குழுவை தென்னாபிரிக்காவுக்கு அனுப்புவது என்பது குறித்து ஐ நா. பொதுச் செயலர் முடிவு எடுப்பார்.

## அரசின் அறிவிப்பு

வடக்குக் கிழக்கு மாகாண மக்கள் தமது தனிப்பட்ட மற்றும் பொதுப் பிரச்சினைகள் பற்றி கண்டி தெல்தெனியாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி நடமாடும் சேவையின் போது தெரிவித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (14)

## நூல் வெளியீட்டு விழா

பிள்ளைக்கவி வ சிவராசசிங்கம் அவர்களின் உரையுடன் கூடிய 'கந்தபுராணம்-சூரபன்மன்வதைப்படலம் நூல் வெளியீட்டு விழா 21 ஆம் திகதி வெள்ளி கிழமை, பிற்பகல் 2 00 மணிக்கு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறும். 47

NORTHERN PROVINCE AFFILIATED UNIVERSITY COLLEGE

## VACANCIES FOR ACADEMIC AND ACADEMIC SUPPORT STAFF

(PERMANENT / TEMPORARY / VISITING)

Applications & are invited from suitably qualified persons for the following posts.

1. COLLEGE LECTURER (PROBATIONARY) IN ENGLISH

SALARY SCALE : Rs 3,900 — 6×100 — 4 500 p.m.

### QUALIFICATIONS :

i First or Second Class Special Degree from a recognized University in the relevant field of study.

or

ii Pass in a special Degree with a Postgraduate qualification in the relevant field of study.

or

iii Such other qualifications as approved by the University Grants Commission

2. COLLEGE LECTURER (GRADE II) IN ENGLISH

SALARY SCALE ; Rs 4,500 — 16×200 — 7,700 p. m.

### QUALIFICATIONS :

Qualifications at (i) or ii) or (iii) above and 3 years teaching / research experience in a recognized institution

and

Postgraduate qualifications in the relevant field of study duration of which shall not be less than 01 year.

3 Applications giving full name address, date of birth educational and Professional qualifications experience and any other relevant information with names and address of two referees should be sent to the Assistant Registrar, Northern Province Affiliated University College, Railway Station Road Vavuniya to reach him on or before 31 st August 1992

The top left hand corner of the envelope should be marked Post of Acabemis and Academic Support Staff

4 Applications from employces of University Grants Commission and Higher Educational Institutions / institutes / Government Departments State Corporations and Statutory bodies should be channelled through the Head of respective institutions. However applicants are advised to send a copy of their application direct to the address given above

Applications received after the closing date and incomplete applications will not be considered.

Director

Northern Province Affiliated University College.
Railway Station Road.
Vavuniya, 07 th August 1992.

08034

அகில இலங்கை காந்திசேவா சங்கம்

# வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 30 08, 92 ஞாயிறு காலை 10 00 மணிக்கு உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு அதிவிசேடமான சேவைகளை வழங்குவதற்கான வழிவகைகளை காணவேண்டி உள்ளமையால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கிறோம். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படவில்லை.

நன்றி

செயலாளர்,
அகில இலங்கை காந்திசேவா சங்கம்

காந்திநிலையம்,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி

08033

★ தாயகம் திரும்புவோரைத் தங்கவைக்க

# ஐ. நா. பொறுப்பில் வவுனியாவில் 3 புதிய அகதி முகாம்கள்!

இந்தியாவிலிருந்து கப்பலில் தாயகம் திரும்பும் ஈழ அகதிகளைப் பராமரிப்பதற்கென வவுனியாவில் மூன்று புதிய அகதி முகாம்கள் திறக்கப்படவுள்ளன.

இந்த புதிய முகாம்கள் ஈழ அகதிகள் நாடு திரும்புவதை மேற்பார்வை செய்யும் ஐக்கிய நாடுகள் அகதிகள் அமைப்பின் பொறுப்பில் செயற்படவுள்ளன.

இந்தியாவிலிருந்து விமான மூலமும், கப்பல் மூலமும் நாடு திரும்பும் அகதிகள் இந்த முகாம்களில் வைத்து பராமரிக்கப்படவுள்ளனர்.

இந்த புதிய முகாம்கள் மூன்றும் தாண்டிக்குளம், நெலுக்குளம், மரக்காரம்பளை ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கலஸ் சில தினங்களுக்கு முன்னர் வவுனியாவுக்கு வருகை தந்து அகதி முகாம்கள் அமைக்கப்படவுள்ள இடங்களை வவுனியா அரச அதிபர் சகிதம் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை இந்தியாவிலிருந்து விமானமூலம் மேலும் 132 ஈழ அகதிகள் நேற்று முன்தினம் பிற்பகல் திருமலை சீனன்குடா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

## 2000 ரூபா கொடுத்து கலாநிதியாகும் கல்லா நிதிகள்!

பணம் கொடுத்து 'டாக்டர்' (கௌரவ டாக்டர்) பட்டம் வாங்கும் பைத்தியம் தமிழகத்தில் தற்போது பலருக்கு பிடித்துள்ளதாக தமிழ் சஞ்சிகை 'சுபமங்களா' தெரிவித்துள்ளது.

தமிழகத்திலுள்ள மூவர்களிடம் பணத்தைக் கட்டி அமெரிக்காவிலுள்ள நிறுவனம் ஒன்றின் மூலம் இந்த 'டாக்டர்' பட்டத்தை இவர்கள் பெறுகிறார்கள்.

தமிழகத்தில் இந்த விதமான டாக்டர் பட்டங்களை ஒரு நகைச்சுவை நடிகர், ஜோதிடர் கூட அண்மையில் பெற்றுள்ளனர்.

ஒரு 'டாக்டர்' பட்டத்திற்கு 2000 ரூபா வரையில் கட்டணம் அறவிடப்படுகிறது.

மேலும் சிலர் மூவரிடம் பணத்தைக் கட்டி அமெரிக்க நிறுவனத்திடமிருந்து பட்டத்தை எதிர்பார்த்துள்ளனர். அவர்களில் நீதிபதி ஒருவரும் அடங்குவார். இப்படி அச் சஞ்சிகை எழுதியுள்ளது.

## நல்லூரில் இன்று காலை

இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு நல்லூர் ஆலயத்தில் திருவாசகம் ஓதப்படும்.

காலமடைந்த சைவ பரிபாலனசபை பிரசார செயலாளர் மரு. நமசிவாயதேசிகர் பல வருடங்களாக நல்லூரில் தேரடியில் செய்துவந்த இப்பணி இன்று அவரது தொண்டர்களால் தொடரப்படுகிறது.

## சைவநெறி வினாவிடை

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தால் வெளியிடப்பட்டுள்ள ஆண்டு ஒன்பதுக்குரிய சைவநெறி வினா விடைப் புத்தகம் மேற்படி மன்றத்தினால் தென்மராட்சிக் கோட்டத்திலுள்ள 40 பாடசாலை நூலகங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

## சடலம் வந்தது

துபாயில் பணிபுரிந்த இலங்கைப் பணிப்பெண் ஒருவர் அங்கு மர்மமான முறையில் மரணமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர் பணிபுரிந்த வீட்டு உரிமையாளரினால் ஷார்ஜா சவச் சாலையில் ஒப்படைக்கப்பட்டு அங்கு பல தினங்கள் அனாதரவாகக் கிடந்த இப்பெண்ணின் சடலம் பின்னர் சில சமூக அமைப்புகளின் உதவியுடன் நேற்று முன்தினம் கொழும்புக்கு எடுத்து வரப்பட்டது.

## இறுதி ஆட்டத்திற்கு தகுதி

செய்பாத்தேசப்ட சன சமூக நிலையம் நடத்தி வந்த ஓவர்கேம் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் அரை இறுதி ஆட்டங்கள் ஈச்சமோட்டை பாலர் குளமைதானத்தில் இடம்பெற்றன.

முதல் இடம் பெற்ற ஆட்டத்தில் காந்தி ஜீ 'ஏ' பிரிவு அணி அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை 9: 15, 15: 2, 15. 11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் ஆரங்கால் மதிய வி. க 'ஏ' பிரிவு அணியை வராலி இளைஞர் வி. க. அணி 9; 15, 15: 6, 15: 10 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்து இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது.

இறுதி ஆட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி பி.ப 4 மணிக்கு இடம்பெறும். 16

## முஸ்லிம் காங்கிரஸின் யோசனை நடைமுறைச் சாத்தியமற்றது

வடகிழக்கு இணைப்புக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள யோசனைகள் நடைமுறைச்சாத்தியமற்றது என தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள யோசனையை ஏற்பதாயின் அது பின்னர் பல நிர்வாகப் பிரச்சினைகளை ஏற்படுத்துமெனவும் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

## தீர்வு தாமதமாவதற்கு அஷ்ரப் சொல்லும் காரணம் இது

"முஸ்லிம்களின் உரிமைகளை தாராள மனத்துடன் தமிழ்க்கட்சிகள் அங்கீகரிக்க வேண்டும் இந்த அங்கீகாரம் பின்தள்ளப்படுவதனால் தான் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வும் பின்தள்ள படுகிறது."

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரப்.

## உல்லாசப்பயணிகள் வருகையால் 1000 கோடிரூபா வருமானம்

உல்லாசப் பயணிகளின் வருகையின் மூலம் இவ்வருடம் இதுவரை ஆயிரம் கோடி ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளதாக அரசின் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

கடந்த வருடம் உல்லாசப் பயணிகளின் வருகையினால் 640 கோடி ரூபா வருமானமாகக் கிடைத்தது.

புதைபொருள், வழிபாட்டு முக்கியத்துவம் வாய்ந்த சிகிரியா, தம்புள்ள, பொலநறுவ, அனுராதபுரம், கண்டி ஆகிய இடங்களைப் பார்வையிடவே அதிகளவு உல்லாசப்பயணிகள் இங்கு வந்திருந்ததாகவும் அச்செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

## கோப்பாய் விபத்தில் ஒருவர்பலி;ஒருவர் படுகாயம்

கடந்த ஞாயிறு கோப்பாய்ச்சந்தியில் ஆடுகளுக்கு இலைகுழைகளை பிடுங்கிக் கொண்டு சென்றபோது பருத்தித்துறை வீதியால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதினால் சுயநினைவற்ற நிலையில் யாழ் பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவரே இவர் ஒருவர் நேற்றுப் பகல் மரணமானார்.

கோப்பாய்ச்சந்தியைச் சேர்ந்த பி. சோதிசுந்தரம் (66) என்பவரே மரணமானவராவர்.

★ ★ ★

உழவு இயந்திரம்-சைக்கிள் விபத்தில் சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவர் படுகாயத்துக்கு உள்ளாகி யாழ் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறு கொழும்புத்துறை சந்தியில் இவ்விபத்து இடம்பெற்றது.07

## 2861 பரீட்சை நிலையங்களில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

இம்மாதம் 23 ஆம் திகதி 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வடக்குக்கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் 2861 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

2½ லட்சம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவர். 3¼ லட்சம் மாணவர்கள் 5 ஆம் ஆண்டுக்கான கையெழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவர்.

அனுமதி அட்டைகள் ஏற்கனவே சம்பந்தப்பட்ட கல்விப் பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கையெழுத்துப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மனிதர்களுக்கு மட்டுமல்ல குரங்குகளுக்கும் தொழிற்சங்கம்

தொழிற்சங்கங்கள் மனிதர்களுக்கு மட்டுமல்ல தொழில் புரியும் ஜீவராசிகள் அனைத்துக்கும் பொதுவானவையே.

இந்த வகையில் குரங்குகளுக்கெனவும் புதிய தொழிற்சங்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அது இங்கல்ல - ஒல்லாந்தில்! இந்த தொழிற்சங்கமே உலகிலேயே முதன்முதலாக குரங்குகளுக்கென அமைக்கப்பட்ட தொழிற்சங்கமென்ற பெருமையையும் பெறுகிறது.

★ 1000 பரல் கேட்டும்

## 60 பரல்கள் மண்ணெண்ணையே கோமாரி கப்பலில் வந்தது

பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த கோமாரி கப்பலில் யாழ் மாவட்டத்திற்கென 60 பரல்கள் மண்ணெண்ணெயும் 178 பரல்கள் தேங்காய் எண்ணெயும் வந்து சேர்ந்துள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் யாழ் மாவட்டத்திற்கென முதலில் 1000 பரல் மண்ணெண்ணெயை உடன் அனுப்பி வைக்குமாறு யாழ் அரச அதிபர் கொழும்பு சென்றிருந்த வேளை புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகளுடன் கோரிக்கை விடுத்திருந்தார்.

கோமாரி கப்பலில் அதிகளவு மண்ணெண்ணெய் எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்பட்டும் 60 பரல்கள் மண்ணெண்ணெயே புனர்வாழ்வு அமைச்சு அனுப்பி வைத்திருப்பதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 47

## வடக்கில் 29 பிரதேச செயலகங்கள்

268 பிரதேச செயலகங்களை அமைக்கும் திட்டத்தின்கீழ் 68 பிரதேச செயலகங்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் 29 வடக்கில் அமைந்துள்ளன.

வடக்கில் பிரதேச செயலகங்கள் அமையவுள்ள பகுதிகள் வருமாறு:-

யாழ் மாவட்டம்:- வடமராட்சி கிழக்கு (பருத்தித்துறை), சாவகச்சேரி, வடமராட்சி வடக்கு, நல்லூர், வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி தென்மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தென்மேற்கு, நெடுந்தீவு தென்பகுதி (வேலணை), வலிகாமம் மேற்கு, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்

வவுனியா மாவட்டம்:- வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, வெங்கல செட்டிக்குளம்.

மன்னார் மாவட்டம்:- மன்னார், மாந்தைமேற்கு, நானாட்டான், முசலி, மடு.

முல்லைத்தீவு மாவட்டம்:- புதுக்குடியிருப்பு, மரிதைப்பற்று, மாந்தை கிழக்கு, துணுக்காய்.

கிளிநொச்சி மாவட்டம்:- கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி.

## கனத்தை அசம்பாவிதங்களை ஸ்ரீமாவும் விரும்பவில்லை

கடந்த வாரம் கனத்தையில் நடைபெற்ற கலவரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் சிலர் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் அக்கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள பெரும்பாலானோர் இத்தகைய வன்செயல்களை விரும்பவில்லை. இவ்வாறான வன்செயல்கள் சுதந்திரக் கட்சிக்கும் பெரும் பாதிப்பையே ஏற்படுத்தும்' எனக் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர் ஒருவர் இது குறித்துத் தெரிவித்தார்.

"இந்த எஸ். எல். எப். பி தீவிரவாதிகள் நடந்து கொண்டவிதம் குறித்து திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூட விரும்பவில்லை, சுதந்திரக்கட்சித் தீவிரவாதிகள் இவ்வாறு நடந்துகொண்டால் நாட்டுக்கும், தனக்கும் என்ன நடக்குமென்று ஸ்ரீமாவுக்குத் தெரியும்"

'ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக ஸ்ரீமாவை முன்தள்ளும் விடயம் கூட அவருக்குத் திகிலை ஏற்படுத்தியுள்ளது' என்றும் அந்த சிரேஷ்ட எம். பி தெரிவித்தார்.

## சித்தன்கேணிக்கு அனுப்பியதபால் நெடுங்கேணிக்குச் சென்றது

ஒருவருடம் கழிந்தும் கிடைத்த ஒய்வூதியக் காசுக் கட்டளையை மாற்ற முடியாது திண்டாடும் பரிதாப நிலை சித்தன்கேணியைச் சேர்ந்த ஒரு ஒய்வூதியருக்கு ஏற்பட்டுள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்குரிய ஒய்வூதியப் பணம் கொழும்பிலிருந்து காசுக்கட்டளையாக இந்த ஒய்வூதியருக்கு அனுப்பப்பட்டது.

இந்தக் காசுக்கட்டளை வடமாகாணத்தில் பல இடங்களுக்குச் சென்று இறுதியில் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் ஒய்வூதியரை அடைந்தது.

சித்தன்கேணி உபதபாலதிபருக்கு 1991 ஆகஸ்ட் மாதமே அட்வைஸ் கிடைத்திருந்தும் ஆறு மாத காலம் சென்றுவிட்டதால் இந்தக் காசுக்கட்டளையை மாற்ற மறுத்துவிட்டார்.

சித்தன்கேணிக்கு அனுப்பப்பட்ட காசுக்கட்டளை நெடுங்கேணிக்குச் சென்றதாலேயே ஒய்வூதியர் பணத்தைப்பெற முடியாத நிலை ஏற்பட்டதெனத் தெரியவருகிறது (18)

★ தமிழர் புனர்வாழ்வு கழகம் திட்டம்

# மரநடுகை, பராமரிப்பில் ஈடுபடும் மாணவருக்கு பணப்பரிசு!

சுற்றாடல் சூழலைப்பாதுகாக்கும் பொருட்டு மரம் நடுகைத் திட்டத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உருவாக்கியுள்ளது இந்தத் திட்டத்தில் மாணவர்கள் ஒருபங்களிப்பை பெறவும், அவர்களை ஊக்குவிக்கவும் இக்கழகம் சிறந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது

பொது இடங்களில் வீதியோரங்களில் மரங்களை நாட்டி அவற்றை பராமரிக்கத் தூண்டும் வகையில் கோட்ட மற்றும் மாவட்ட மட்டங்களில் பணப் பரிசுகளை வழங்கும் கவர்ச்சியான திட்டத்தை கழகம் வகுத்துள்ளது

இந்தத் திட்டம் 3 வருடங்களுக்கு அமுல் செய்யப்படும் தெரிவு செய்யப்பட இருக்கும் மாணவர்களுக்கு மாதாந்தம் சன்மானம் வழங்கப்படும் இந்த சன்மானத்தை சேமிப்பில் இடவும் இத்திட்டம்வகை செய்கிறது மேலும் மரங்களைப் பராமரிப்பதற்கு புனர்வாழ்வுக்கழகம் நிதி உதவியும் வழங்கும்

இவை சம்பந்தமான பூரண விவரங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள பரிசு விவரம் கீழே தரப்படுகின்றது.

கல்விக் கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்கும் ஒவ்வொரு கோட்ட மட்டத்திலும் பின்வருமாறு பரிசுத் தொகை வழங்கப்படும்

| | |
|---|---|
| 1வது வருடம் | ரூ. 5000 00 |
| 2வது வருடம் | ரூ. 2500 00 |
| 3வது வருடம் | ரூ. 1250.00 |

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்குமான பரிசுத் தொகை பின்வருமாறு அமையும்

| | |
|---|---|
| 1வது வருடம் | ரூ. 10000.00 |
| 2வது வருடம் | ரூ. 5000.00 |
| 3வது வருடம் | ரூ 2500 00 |

கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் பாடசாலைகளுக்கான பரிசுகள் பின்வருமாறு அமையும்

| | |
|---|---|
| 1வது வருடம் | ரூ 10000.00 |
| 2வது வருடம் | ரூ. 5000 00 |
| 3வது வருடம் | ரூ 2500 00 |

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் பாடசாலைகளுக்கான பரிசு பின்வருமாறு அமையும்

| | |
|---|---|
| 1வது வருடம் | ரூ. 50 000 00 |
| 2வது வருடம் | ரூ 30.000 00 |
| 3வது வருடம் | ரூ 15.000,00 |

## சபையில் கேட்டவை

அராலியில் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்த இராணுவ அதிகாரிகளான மேஜர் ஜெனரல்கள் டென்சில் கொப்பேகடுவ விஜய விமலரட்ண ஆகியோரின் மரணச்சடங்குகள் கண்டியில் நடைபெற்றபோது முன்னாள் ஜே. வி. பி. சக்திகளும் வன்முறையில் ஈடுபட்டனர்

— அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா

வருடம் தோறும் கல்விஉதவி நிதிச்சிக்கு செலவிடும் 300கோடி ரூபா மூலம் வருடத்துக்கு பத்து பல்கலைக்கழகங்களை நாட்டில் நிறுவலாம்

— பந்துல குணவர்த்தனா

வடக்கு கிழக்கு பகுதிகளில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் நடைபெறும் பரீட்சைகள் முறையாக நடைபெறுகின்றதா?

— எம். எம். அபூபக்கர் (முஸ்லிம் காங்கிரஸ)

வடக்கு கிழக்கு பகுதிகளில் இனிமேல் விசேட பரீட்சைகள் நடைபெறமாட்டாது நாடு முழுவதும் ஒரே நேரம் பரீட்சைகள் நடைபெறும்

— அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்

சுதந்திரக்கட்சியினரின் 1970 - 1971 ஆட்சியின் போது 2500ஆசிரியர்களே நியமிக்கப்பட்டனர் எமது ஆட்சியில் அறுபது ஆயிரம் ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளனர்

— அமைச்சர் அலவி

பரீட்சைத் திணைக்களத்தில் அதிகளவு தமிழ் ஊழியர்கள் நியமிக்கப்படவேண்டும்

— ஒரு தமிழ் எம். பி.

பாடசாலைகளில் தமிழ், சிங்கள மொழிகள் கற்பிக்கப்படும் எனக் கூறப்பட்டது ஆனால் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை இதனை அமுல் செய்தால் தமிழ், சிங்கள மாணவரிடையே ஐக்கியம் ஏற்படும்

— அதாவுட செனிவிரட்னா

● கிளிநொச்சியில்

## 32மைல் நீளவீதி திருத்தி புனரமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் பூநகரிச் சந்தியில் இருந்து பூநகரி, முழங்காவில் சந்திவரையிலான 32 மைல் நீளமுடைய வீதியை புனரமைப்புச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் அடுத்த வாரம் ஆரம்பமாக உள்ளன.

இவ்வீதிப்புனரமைப்பில் நீர்ப்பாசனத் திணைக்களம் வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபை, உள்ளூராட்சி திணைக்களம், காணித்திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் பங்கு ஏற்கின்றன இத்திட்டத்திற்கான பணம் அவசர புனர் நிர்மாண புனருத்தாரணத் திட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்டதாகும் இத்திருத்த வேலைக்கு மொத்தமாக 80 இலட்சம் தேவைப்பட்ட போதிலும் தற்போது 40 இலட்சமே ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 55

## காரைநகரில் இருந்துதாக்குதல்

காரைநகர் கடற்பிராந்தியத்திலிருந்தும் கடற்படையினர் நேற்று முற்பகல் தொடக்கம் பிற்பகல் வரையில் ஷெல் வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவடி நிலை, பொன்னாலைப் பகுதிகளில் கவிபர் சன்னங்கள் பட்டதாகவும் கூறப்படுகிறது. 07

## காபூல் மீதான தாக்குதல தொடருமென்கிறார் ஹெக்மத்யார்

ஆப்கான் ஆட்சித் தலைவர் றப்பானிக்கு தம்மை தலைமை ஆட்சிக் குழுவிலிருந்து நீக்க அதிகாரமில்லையென ஹிஸ்பி இஸ்லாமிக் குழுவின் தலைவர் குல்புதீன் ஹெக்மதியார் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள இக்குழுவின் தலைமை அலுவலகத்திலிருந்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

முன்னைய கம்யூனிஸ அரசுடன் இணைந்து செயற்பட்ட இராணுவக்குழுக்கள் காபூலை விட்டு வெளியேறும் வரை தாக்குதல்கள் தொடரும் என ஹெக்மத்தியார் தெரிவித்தார். தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்து இடம் பெற்றன.

இதற்கிடையில் ஆயிரக்கணக்கான மக்கள் காபூலை விட்டு வெளியேறிக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## முல்லைத்தீவு வங்கிகளில் பணம் வைப்பிலிட்டோர் திண்டாட்டம்

முல்லைத்தீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக முல்லைத்தீவு இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன இயங்காமல் இருந்து வருகின்றன இதனால் வங்கியின் வாடிக்கையாளர்கள் கடந்த இரண்டு வருடங்களாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வங்கிகளில் தங்கள் பணத்தை வைப்புச் செய்தவர்கள் தற்போதைய இக்கட்டான நிலையில் அவற்றை தமதுதேவைகளுக்கு மீளப் பெறமுடியாத நிலையில் உள்ளார்கள் அத்தோடு நகைகளை அடகு வைத்தவர்களும் அவற்றை எடுக்க முடியாது திண்டாடுகின்றனர்

இவ் வங்கிகளை புதுக்குடியிருப்பில் இயங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டும் இதுவரை வங்கிகளை இயங்க வைக்க எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படவில்லை. 56

## இன்று ஊதியம் வழங்கப்படும்

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான ஆடி மாதத்திற்குரிய ஊதியம் இன்று புதன்கிழமை முதல் நாவலர் வீதியிலுள்ள தற்காலிக காரியாலயத்தில் வழங்கப்படும் என நிர்வாக முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## கூட்டுப்படை தலைமையகம் அறிவிப்பு கோரப்பட்ட மண்ணெண்ணெயை அனுப்பிவைப்பது சாத்தியமல்ல

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தலைமையில் இம்மாதம் 13 அன்று நடைபெற்ற கூட்டத்தில் யாழ் மாவட்டத்துக்குத் தேவையான மண்ணெண்ணெயின் அளவை கூட்டுப்படைத் தலைமையகம் கணக்கிட்டுள்ளதென அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

போதுமான அளவு கூடுதலாக குறைக்கப்பட்டும் அனுமதிக்கப்படுமெனவும் கூட்டுப்படைத் தலைமையகப் பிரதிநிதி தமக்கு தெரிவித்துள்ளதாக யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அரச அதிபரால் கோரப்பட்ட முழுத்தொகையையும் கொடுத்துதவுதல் சாத்தியமற்றது எனறுப் கூட்டுப் படைத் தலைமையகப் பிரதிநிதி மேலும் தெரிவித்துள்ளார். 47

## யாழ்.அநாதைச் சிறுவருக்கு ஜேர்மன் தமிழர் உதவுவர்

யாழ் மாவட்டத்தில் இயங்கிவரும் அநாதைச் சிறுவர் இல்லங்களுக்கு நிதியுதவி செய்ய ஜேர்மனியில் வாழும் தமிழர்கள் முன்வந்துள்ளனர்.

இதற்காக அவர்கள் நிதி சேகரித்து வைத்துள்ளதாக யாழ் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளனர்.

இதனால் இங்கு இயங்கிவரும் அநாதைச் சிறுவர் இல்லங்களின் பெயர் இடம், பொறுப்பாளர் பெயர், வங்கிக்கணக்கு வங்கி விபரம் என்பவற்றை அனுப்பி வைக்குமாறும் ஜேர்மனியில் வாழும் தமிழர்கள் யாழ் அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளனர் 47

## சீருடை விநியோகம்

யாழ் சுகாதாரதிணைக்கள ஊழியர்களுக்கும் மற்றும் யாழ். பிராந்திய அரசினர் வைத்திய சாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் இவ் வருடத்திற்கான (1992) உத்தியோகபூர்வ சீருடைகள் இவ்வாரம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினர் சீருடைகளை வாகனம் மூலம் சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் நேரடியாக கொண்டு வழங்கி வருவதாக யாழ் சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். 13

## வட-கிழக்கிலுள்ளோருக்கும் நியமனம வழங்கக் கோரிக்கை

வட-கிழக்கு மாகாணத்தில் 1990/1991 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆசிரிய நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது

1989 ஆம் ஆண்டிக்கு முன்னர் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் ஒரு உறுப்பினருக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் திட்டம் நடைமுறையிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 1990/91 ஆம் ஆண்டுகளிலேயே கூடுதலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 14

## ஜனதாக்கட்சியின் விருந்தில அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள்!

அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனதாக்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி வழங்கிய விருந்தில் கலந்து கொண்டதாக டில்லி பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

எனினும் இந்த விருந்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் விவரங்களை அந்தப் பத்திரிகைகள் வெளியிடவில்லை

இதேவேளை அ. தி. மு. க இச்செய்தியை மறுத்துள்ளது.

## விஞ்ஞானிகள் முயற்சி வெற்றி

எய்ட்ஸ நோய் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பின் நடவடிக்கையில் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ள அமெரிக்க விஞ்ஞானிகள் முன்னேற்றம் கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாய்கள் மீதான சோதனை வெற்றியடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை, தலைமையகம்

## வலிவடக்குப் பிரிவு இடைக்கால நிர்வாக நியமனம்

19. 08. 92, புதன்கிழமை தொடக்கம் 30 08 92 ஞாயிற்றுக்கிழமை வரை வலிவடக்குப் பிரிவிற்கு புதிய இடைக்கால நிர்வாகம் யாழ்கிளை இடைக்கால நிர்வாகத்தால் நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும் இவர்களே வலிவடக்குப் பிரிவு கடமைகளையும் தேர்தல் சம்பந்தமான விடயங்களையும் கவனித்து வருவார்கள் என்பதை இத்தால் அறியத் தருகிறோம்,

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம், 18. 08. 92.

செஞ்சிலுவைச்சங்க சேவையின் தலைவர் (இடைக்கால நிர்வாகர்)

08035


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கலவியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 19 . 08- 92 இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது